மாநில உரிமைகளைத் தாரை வார்க்கும் விஜய் அரசு!

பல்கலைக்கழகத் துணைவேந்தர் நிய மனங்களுக்கானப் பெயர்களைப் பரிந் துரை செய்யும் குழுவில் மாநில அரசின் உரிமைகளை விட்டுக் கொடுக்கக்கூடாது என்பதில் திராவிட மாடல் அரசு உறுதியாக இருந்தது. ஒன்றிய அரசின் நிலைப்பாடோ, தேர்வுக் குழுவில் தன் தரப்பின் கை ஓங்கி யிருக்க வேண்டும் என்பதும், தன்னால் தேர்ந்தெடுக்கப்படுகின்றவர்களையே துணைவேந்தராக நியமிக்க வேண்டும் என்பதும்தான். அதை ஆளுநர் மூலமாக செயல்படுத்துவதற்கு முனைப்பாக இருந்தது.

துணைவேந்தருக்கானப் பெயர்களைப் பரிந்துரை செய்யும் குழுவில் பல்கலைக்க ழக மானியக் குழுவின் (யு.ஜி.சி) உறுப்பி னர் இடம்பெற வேண்டும் என்று ஆளுநர் மூலம் தரப்பட்ட அழுத்தத்தை திராவிட மாடல் அரசு ஏற்கவில்லை. யு.ஜி.சி. பிரதிநி தியைச் சேர்ப்பதற்கு ஒப்புக்கொண்டால், மாநில அரசின் பிரதிநித்துவம் பலவீனம டையும். எண்ணிக்கையில் ஒன்றிய அர சின் சார்பில் உள்ளவர்களே அதிகளவில் இருப்பார்கள். அவர்களே துணைவேந்தர் யார் என்பதை முடிவு செய்வார்கள். மாநி லங்களில் உள்ள பல்கலைக்கழகங்களில் மாநில அரசு வேடிக்கைப் பார்க்கும் நிலை மையில் இருக்கக்கூடாது என்ற உறுதியு டன் இருந்தது திராவிட மாடல் அரசு.

தமிழ்நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட நிலையில், துணைவேந்தரைப் பரிந்து ரைக்கும் குழுவில் யு.ஜி.சி. உறுப்பினரை சேர்ப்பதற்கு த.வெ.க அரசு சம்மதித்தது. இதன் மூலம் தமிழ்நாடு அரசின் பிரதி நித்து வத்தைவிட ஆளுநரின் பிரதிநித்துவம் வலிமை பெற வழி வகுத் தது. தமிழ்நாட்டின் உரிமையைத் தாரை வார்த்தது. தேசிய கல்விக் கொள்கையை செயல்படுத்தும் சி.பி.எஸ்.இ. பள்ளிகளுக் கானத் தாராளமான அனுமதி, உயர்கல் வியை முழுமையாகத் தனியார் மயமாக் கும் வகை யிலான நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களான நில அளவுக் குறைப்பு உள்ளிட்ட பல நடவடிக்கைகளை யும் ஒன்றிய அரசின் விருப்பப்படியே நிறை வேற்றி வருகிறது விஜய் அரசு.

மாநில உரிமைகளைப் போராடிப் பெறுவ தில் இந்தியாவுக்கே முன்னோடியான மாநி லம் தமிழ்நாடு. சுதந்திர தினத்தில் முதல மைச்சர் விஜய், செயின்ட்ஜார்ஜ் கோட்டை யில் கொடியேற்றிவிட்டு, யாரையோ பார்த்து சல்யூட் அடித்து, பதில் சல்யூட் பெற் றாரே, அந்த தேசியக் கொடியை ஏற்றும் உரிமையைப் பெற்றுத் தந்தவர் முத்தமி ழறிஞர் கலைஞர்.

ஆளுநர்களே குடியரசு தினத்திலும் சுதந் திர தினத்திலும் கொடியேற்றி வந்த நிலை யில், ஒன்றிய அரசில் குடியரசு தினத்தில் குடியரத்தலைவரும்சுதந்திர தினத்தில் பிர தமரும் கொடியேற்றுவது போல, மாநிலங் களிலும் சுதந்திர தினத்தில் முதல்வர்கள் கொடியேற்றும் உரிமையை பிரதமர் இந்தி ராகாந்தியிடம் வலியுறுத்திப் பெற்றுத் தந்த வர் கலைஞர். அதனால்தான் **விஜய் மட்டு மல்ல, இதற்கு முன் தமிழ்நாட்டில் இருந்த முதலமைச்சர்களும், இந்தியாவின் அனைத்து மாநிங்களிலும் உள்ள முதல மைச்சர்களும், குஜராத்தில் முதலமைச்ச ராக இருந்த இன்றைய பிரதமர் மோடியு மேகூட அவரவர் மாநிலங்களில் சுதந்திர தினத்தில் தேசியக் கொடியை ஏற்ற முடிந் தது. தமிழ்நாட்டிற்கெனத் தனிக் கொடியை யும் வடிவமைத்து பிரதமர் இந்திராகாந்தி யிடம் வழங்கியவர் கலைஞர்.**

மாநில சுயாட்சி என்பது பேரறிஞர் அண்ணா காலத்தில் தொடங்கி இன்றைய கழகத் தலைவர் வரை தி.மு.க. முன்னெ டுத்து வரும் தொடர் முயற்சியாகும். 1969ஆம் ஆண்டே நீதிபதி ராஜமன் னார் தலைமையிலானக் குழுவை அமைத்து மாநில சுயாட்சி க்கான முன்னெடுப்பைக் கலைஞர் மேற் கொண்டார். 1974ல் தமிழ்நாடு சட்ட மன்றத்தில் வரலாற்று சிறப்புமிக்க மாநில சுயாட்சித் தீர்மானத்தை நிறை வேற்றியவரும் கலைஞர்தான்.

தி.மு.க மீண்டும் பிரிவினைக் கொள்கையைக் கையில் எடுக்கிறதா எனக் கேட்டவர்களுக்கு கலைஞர் சொன்ன பதில், "பிரிவினை கேட்க வில்லை. இந்திய துணைக் கண்டத்தில் இன்னொரு பிரிவினையைத் தடுப்பதற்கா கத்தான் மாநில சுயாட்சியைக் கோரு கிறோம்".

நாடாளுமன்றத்தில் மாநில சுயாட்சி குறித்து பல முறை வலியுறுத்தியவர் முர சொலி மாறன் எம்.பி. அவர்கள். 1975ஆம் ஆண்டு இது குறித்து அவர் எழுதியபோது, "இன்று இமயம் முதல் குமரி வரை அனைத்து பாமர மனிதருக்கும் தெரிந்த வர் பிரதமர் இந்திராகாந்திதான். இன்றே அரசியல் சட்டத்தைத் திருத்தி, மாநிலம் வாழ் மக்களுக்குள்ள அவமானத்தையும் அநீதியையும் போக்கும் வகையில் அனை வரின் சுயமரியாதையையும் மதிக்கும் விதத்தில் மாநில சுயாட்சி வழங்குங்கள். அப்போதுதான் இந்தியா காருள்ள அள வும், கடல் நீருள்ள அளவும் ஒரு அரசியல் அமைப்பாக இருக்கும்" என்று அழுத்தமா கக் குறிப்பிட்டார்.

தமிழ்நாட்டில் கலைஞர் தலைமையி லான தி.மு.க அரசால் மாநில சுயாட்சித் தீர் மானம் நிறைவேற்றப்பட்ட பிறகு, பல மாநி லங்களும் தங்கள் உரிமைக்கானக் குரல்களை எழுப்பின. ஜம்முகாஷ்மீர் மாநி லத்தின் முதலமைச்சராக இருந்த தேசிய மாநாட்டுக் கட்சியின் தலைவர் ஃபரூக் அப் துல்லா அந்த மாநில சட்டமன்றத்தில் மாநில சுயாட்சி தீர்மானத்தை நிறை வேற்றினார். மேற்கு வங்க முதல்வராக இருந்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் ஜோதிபாசு, மாநில உரிமை களை வலியுறுத்தினார். கர்நாடகத்தில் காங்கிரஸ் கட்சியின் முதலமைச்சராக இருந்த சித்தராமையா மாநில சுயாட்சியின் அவசியத்தை வலியுறுத்தினார். வீரேந்திரா பாட்டீல் என்.டி.ராமராவ் காலத்தில் தொடங்கி, மம்தா பானர்ஜி வரையிலான பல முதலமைச்சர்கள் மாநிலங்களின் அதி காரங்களும் உரிமைகளும் ஒன்றிய அரசி டம் பறிபோய்விடக்கூடாது என்பதைத் தொடர்ந்து வலியுறுத்தியிருக்கின்றனர்.

மாநில சுயாட்சிக்கான முதன்மைக் குர லாகவும்வலிமைக் குரலாகவும் எப்போ தும் ஒலிப்பது தி.மு.க.வின் குரல். அத



கோவி.லெனின்
தி.மு.க .தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசகர்

னால்தான், திராவிட மாடல் ஆட்சியில் 2025ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ஒன் றியமாநில உறவுகளுக்கான உயர்நிலைக் குழு அமைக்கப்பட்டது. திராவிட நாயகர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இந்தக் குழுவின் தலைவராக ஓய்வு பெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி குரியன் ஜோசப் அவர்களையும், உறுப்பினர்களாக ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி அசோக் வரதன் ஷெட்டி, மாநில திட்டக்குழு முன்னாள் துணைத்தலைவர் பேராசிரியர் நாகநா தன் ஆகியோரையும் நியமித்தார்.

தற்போதைய சூழலில் மாநிலங்களுக் குத் தேவையான அதிகாரங்கள் எவை, ஒன்றிய அரசிடமிருந்து பெறவேண்டிய அதிகாரங்கள் எவை, நிதி சார்ந்த முடிவுகள், வளர்ச்சித் திட்டங்கள் இவற்றில் மாநில அர சுகளுக்கு இருக்கவேண்டிய சுயமான உரி மைகள் உள்ளிட்ட பலவும் குறித்து நீதிபதி குரியன் ஜோசப் தலைமையிலான குழு ஆராய்ந்து தனது முதல் கட்ட அறிக் கையை 2026 பிப்ரவரி 16ந் தேதி வழங்கி யது. அடுத்தடுத்த கட்ட அறிக்கைகளுக் கான ஆலோசனைகளும் நடைபெற்று வந்தன.

ஒன்றிய பா.ஜ.க அரசின் தலையாட்டிப் பொம்மையாக இருக்கும் த.வெ.க தலை வர் விஜய், திராவிட மாடல் அரசு நியமித்த ஒன்றியமாநில உறவுகளுக்கான உயர்நி லைக் குழுவைக் கலைத்துவிட்டார். அது வழங்கிய முதல் கட்ட அறிக்கையையும் இணையதளத்திலிருந்து எடுத்துவிட்டார். இது குறித்த த.வெ.க அரசின் அரசாணை யில், இந்தக் குழு தற்சார்பு அமைப்பாக இல்லை என்று கூறி, மாநில அரசின் அதி காரங்கள் குறித்து இனி மாநில சட்டக் கமி ஷன் ஆராயும் எனத் தெரிவிக்கப்பட்டுள் ளது. மாநில சட்டக் கமிஷனோ, தேசிய சட்டக் கமிஷனோ தன்னிச்சையான அதி காரம் கொண்ட அமைப்புகளல்ல. சொத் தையான காரணத்தைச் சொல்லி, மாநில உரிமைகளை ஒன்றிய அரசிடம் அடமா னம் வைக்க முடிவெடுத்துவிட்டது விஜய் அரசு.

இந்தியாவில் மாநிலங்களுக்கு எந்தள வில் அதிகாரம் இருக்கும் என்பதுடன், அரச மைப்புச் சட்டத்தின்படி அமைந்த மாநி லங்கள் என்ற அமைப்பே இனி இருக்குமா என்ற கேள்வி எழுந்துள் ளது. இந்திய வரைபடத்தின் வடமு னையில் இருந்த மாநிலம் ஜம்முகாஷ் மீர். தலைபோன்ற தோற்றத்துடன் அமைந்திருந்த பகுதி. இப்போது அது மாநிலமாக இல்லை. 2019ஆம் ஆண்டில் ஒன்றிய பா.ஜ.க. அரசு அதன் மாநிலத் தகுதியை ரத்து செய்து, ஜம்மு- காஷ்மீரை ஒரு யூனியன் பிரதேச மாகவும், அதனுடன் இணைந்திருந்த லடாக் பகுதியை மற்றொரு யூனியன் பிர தேசமாகவும் அறிவித்தது. ராணுவக் கட் டுப்பாட்டுடன் ஒன்றிய அரசின் நேரடிக் கண்காணிப்பிலான ஆட்சியை நடத்தியது.

தனிச் சட்டத்துடன் சிறப்பு அந்தஸ்துக ளைக் கொண்டிருந்த மாநிலமான ஜம்மு காஷ்மீர் தற்போது புதுச்சேரி போன்ற அதி காரமற்ற சட்டமன்றத்தைக் கொண்ட பகுதியாக மாற்றப்பட்டுவிட்டது. லடாக் பகு திக்கு சட்டமன்றத் தேர்தல் நடைமுறையும் கிடையாது. துணை நிலை ஆளுநரின் நேர டியான ஆட்சிமுறைதான். இதனை எதிர்த்து அங்குள்ள மக்கள் தொடர்ந்து போராடி வருகிறார்கள். ஒன்றிய அரசுமுன்வைக்கும் தீர்வுகள் மாநில உரிமைகளை வழங்குவ தாக இல்லை என்பதே மக்களின் குற்றச்சாட்டு.

ஜம்முகாஷ்மீர் முதல்வரான ஒமர் அப் துல்லா அரசு, தங்களுக்கு முழுமையான மாநில அந்தஸ்து வேண்டும் என்று கோரி சட்டமன்றத்தில் 2026 செப்டம்பர் 28 அன்று தீர்மானம் நிறைவேற்றியது. சட்ட மன்றத்தில் உள்ள 90 உறுப்பினர்களில் 60 உறுப்பினர்கள் இந்தத் தீர்மானத்தை ஆதரித்து நிறைவேற்றினர். பா.ஜ.க.வின் 29 எம்.எல்.ஏ.க்கள் எதிர்ப்புத் தெரிவித்து வெளிநடப்பு செய்தனர்.

லடாக் யூனியன் பிரதேசத்தில் தேர்ந்தெ டுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட சட்ட மன்றம் வேண்டும் என்று லே உயர்நி லைக் குழு, கார்கில் ஜனநாயக கூட்டணி உள்ளிட்ட அமைப்புகள் போராடி வருகின் றன. சமூக செயற்பாட்டாளர் சோனம் வான்சுக் இதில் பங்கெடுத்து செயல்பட்டு வருகிறார். ஆனால், ஒன்றிய அரசின் உள் துறையின் வரைவுத் தீர்மானங்களில் தங் களுக்கான முழுமையான அதிகாரம் இல்லை என்று கூறி லடாக்கின் இரண்டு அமைப்புகளும் அந்த வரைவுத் தீர்மானங்களைப் புறக்கணித்துவிட்டன.

"நாங்கள் கேட்பது மக்கள் பிரதிநிதிகளு டனான அதிகாரம் மிக்க சபை. ஆனால், வரைவுத் தீர்மானத்தின்படி சட்டம், நிர்வா கம், நிதி உள்ளிட்ட அனைத்தும் துணை நிலை ஆளுநரின் அதிகாரத்திலேயே இருப் பது போலத்தான் வரைவுத் தீர்மானங்கள் உள்ளன. மலைக் கவுன்சில்களை அமைத்து உள்ளாட்சி அதிகாரத்தை மட் டுமே வழங்க நினைக்கிறார்கள். இதை ஏற்க முடியாது" என லடாக் அமைப்பினர் போராட் டத்தைத் தொடர்ந்து வருகின்றனர்.

ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் நூற்றா ண்டுக்காக பேரணிகளை நடத்த விஜய் அரசு தாராள அனுமதியை வழங்கி தனது எஜமான விசுவசாத்தைக் காட்டி வருகிறது. அந்த ஆர்.எஸ்.எஸ். அமைப்புக்கு அண் ணல் அம்பேத்கர் தலைமையில் உரு வான இந்திய அரசமைப்பின் மீது நம் பிக்கை கிடையாது. மாநிலங்கள் வலிமை யடைவதை அது விரும்புவ தில்லை. ஒன் றிய அரசுமாநில அரசுகள் என்ற நிலைக் குப் பதில், மத்தியில் ஒரே அரசும், மாநிலங் களைப் பல 'மண்டல்கள்' எனப் பிரித்து, மாநகராட்சிநகராட்சி போன்ற குறைந்த அதிகாரத்துடன் செயல்படச் செய்ய வேண் டும் என்பதுதான் அதன் நோக்கம்

ஜம்மு-காஷ்மீரின் மாநில அந்தஸ்தை ரத்து செய்ததும், லடாக்கில் மக்கள் பிரதிநி தித்துவ அரசுக்குப் பதில் மலைக் கவுன்சில் களை உருவாக்குவதில் ஒன்றிய அரசு காட் டுகின்ற தீவிரமும், அதிகாரமிக்க மாநிலங்களை வெறும் முனிசிபாலிட்டி களாக்கும் முயற்சியின் தொடக்கமே. இந்த ஆபத்தை உணர்ந்துதான் திராவிட மாடல் அரசு ஒன்றிய-மாநில உறவுகளுக் கான உயர்நிலைக் குழுவை அமைத்தது. அதனைக் கலைத்து, அறிக்கையை நீக்கி மாநில உரிமைகளைத் தனது டெல்லி எஜ மானர்களுக்குத் தலைவணங்கித் தாரை வார்க்கிறது த.வெ.க அரசு.

பண்டிகை நாளில் ரத்தக் களறியான தமிழகம்!

ஒரே நாளில் போலீஸ் அதிகாரி உட்பட 8 பேர் கொலை!

செயலற்ற த.வெ.க. ஆட்சியில் சட்டம் – ஒழுங்கு சீர்கேடு!

சென்னை, நவ. 10 – மக்களின் வீடுகளில் விளக்கேற்றி, பட்டாசுகள் வெடித்து, இனிப்புகள் வழங்கி மகிழ்ச்சியோடு கொண்டாடப்பட வேண்டிய தீபாவளி பண்டிகை நாள், தமிழ்நாட்டில் கண்ணீரிலும் பயங்கர மான ரத்த வெள்ளத்திலும் நனைந்து போயுள்ளது.

தமிழகத்தில் சட்டம்ஒழுங்கு நிலைமை மிகவும் மோசமடைந்துவிட்டதாகவும், ரவு டிகளுக்கும் சமூக விரோதிகளுக்கும் காவல்துறையின் மீதான பயம் துளியும் இல்லாமல் போய்விட்டது என்றும் எதிர்க் கட்சிகளும் பொதுமக்களும் தொடர்ச்சி யாகக் குற்றம்சாட்டி வருகின்றனர்.

இந்த நிலையில், அதை நிரூபிக்கும் வகையில் நேற்று முன்தினம் தீபாவளி பண்டிகையன்று ஒரே நாளில் மட்டும் மாநி லத்தின் பல்வேறு மாவட்டங்களில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் உட்பட 8 பேர் கொடூரமாகப் படுகொலை செய்யப்பட் டுள்ள சம்பவம் ஒட்டுமொத்தத் தமிழகத்தை யுமே உறைந்து போகச் செய்துள்ளது. பண்டிகை நாளில் கூட மக்களுக்குப் பாது காப்பு அளிக்க முடியாத அளவிற்கு ஆட்சி நிர்வாகமும் காவல் துறையும் முடங்கி விட் டதா என்ற கொந்தளிப்பு எழுந்துள்ளது.

தீபாவளி நாளில் அரங்கேறிய 8 கொடூரக் கொலைகள்

மாநிலத்தின் பல்வேறு மூலை களிலிருந்து அடுத்தடுத்து வந்த மரணச் செய்திகள் மக்களை அதிர வைத் துள்ளன:

தேனியில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் அடித்துக் கொலை:

சமதர்மபுரம் பகுதியில் மதுபோதை யில் சாலையில் பட்டாசு வெடித்து ரீல்ஸ் எடுத்துக்கொண்டிருந்த கும்பலைத் தட டிக்கேட்ட எஸ்.எஸ்.ஐ செந்தில்குமார், அந்த போதைக் கும்பலால் நடுரோட்டி லேயே கொடூரமாக அடித்துக் கொல்லப் பட்டார். ஒரு காவல் துறை அதிகாரிக்கே இந்த கதி என்றால் சாமானியர்களின் பாதுகாப்பு என்ன என்ற கேள்வி எழுந் துள்ளது.

திருச்சி சமயபுரத்தில் இரட்டைப் படுகொலை:

சுங்கச்சாவடி அருகே உள்ள வாய்க் கால் கரையோரம் நடந்து சென்று கொண்டிருந்த ராகுல் (17), விஷால் (17) என்ற இரு சிறுவர்களை மர்மக் கும்பல் பட்டப்பகலில் அரிவாளால் கொடூரமாக வெட்டிச் சாய்த்துள்ளது. இருவரும் சம் பவ இடத்திலேயே ரத்த வெள்ளத்தில் உயிரிழந்தனர்.

கடலூரில் ரவுடி படுகொலை:

கடலூர் பகுதியில் பிரிதிவிராஜ் என்ற ரவுடி முன்விரோதம் காரணமாகக் கொடூ ரமாக வெட்டிக் கொல்லப்பட்டார்.

மானாமதுரையில் ரவுடி விக் னேஷ் கொலை:

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை பகுதியில் ரவுடி விக்னேஷ் என்பவர் ஆயு தங்களால் தாக்கப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டார்.

திருவள்ளூரில் இளம் பெண் மேகலா படுகொலை:

திருவள்ளூர் பகுதியில் மேகலா என்ற இளம் பெண் மர்ம நபர்களால் தாக்கப்பட டுப் பரிதாபமாக உயிரிழந்தார்.

திருச்சி புறத்தாக்குடியில் ஐ.டி. ஊழியர் கொலை:

திருச்சி புறத்தாக்குடி பகுதியைச் சேர்ந்த கிறிஸ்டோபர் என்ற ஐடி ஊழியர் மர்ம நபர்களால் தாக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டார்.

கல்லல் அருகே ரவுடி நவீன் வெட்டிக்கொலை:

சிவகங்கை மாவட்டம் கல்லல் அருகே ரவுடி நவீன் என்பவர் பட்டாக் கத்திகளால் வெட்டப்பட்டுச் சடலமாக மீட்கப்பட்டார்.

காவல்துறையின் கட்டுப்பாடு நழுவிவிட்டதா?

ஒரே நாளில் அடுத்தடுத்து 8 மனித உயிர்கள் கொடூரமாகப் பறிக்கப்பட்டிருப் பது வெறும் தற்செயலான நிகழ்வு அல்ல. சமூக விரோதிகள், போதைக் கும் பல்கள் மற்றும் கூலிப்படைகள் எந்தவித அச்சமுமின்றித் தங்கள் விருப்பப்படி செயல்படத் தொடங்கிவிட்டனர் என்ப தையே இது நிரூபிக்கிறது.

குறிப்பாக, பொதுமக்களைப் பாது காக்க வேண்டிய சீருடை அணிந்த காவல் அதிகாரியையே ஒரு போதைக் கும்பல் சாலையில் அடித்துக் கொல்கி றது என்றால், தமிழ்நாட்டில் சட்டம் எங்கே இருக்கிறது என்ற அச்சம் சாமானிய மக் களை ஆட்டிப்படைக்கிறது. கஞ்சா மற் றும் மதுபோதையின் ஆதிக்கமும், பட் டாக் கத்திகள் சர்வ சாதாரணமாகப் புழங்குவதும் இந்த வன்முறைகளுக்கு முக்கியக் காரணமாக அமைகிறது.

அரசின் படுதோல்வி

சென்னை பிரியாணி கடையில் அரி வாள் வெட்டு, செங்குன்றத்தில் எஸ்.ஐ மீது தாக்குதல் முயற்சி, குழந்தைகள் மாயமாவது எனத் தொடர்ச்சியாக அபாய மணிகள் அடித்தும், ஆளும் விஜய் அரசு சட்டம்ஒழுங்கைத் தீவிரமாகக் கையில் எடுக்கவில்லை என்ற விமர்சனம் வலுத் துள்ளது.

முதல்வர் உடனடியாகத் தனது நேர டிக் கட்டுப்பாட்டில் உள்ள உள்துறைச் செயலாளர் மற்றும் காவல் துறை டிஜி பியை அழைத்து அவசர உயர்நிலைக் கூட்டத்தைக் கூட்ட வேண்டும். போதைக் கும்பல்களையும் கூலிப்படை ரவுடிகளை யும் கூண்டோடு வேட்டையாடி சிறையில் தள்ள கடுமையான உத்தரவுகளைப் பிறப்பிக்க வேண்டும். இல்லாவிட்டால், பண்டிகை தினங்கள் கூட பாதுகாப்பு இல் லாத பயங்கர நாட்களாகவே மாறிவிடும் என்ற அச்சம் மக்கள் மனதில் வேரூன்றி விடும்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

துறைமுகம் நா. இராமதாஸ்
நவம்பர் 10 (2016)



துறைமுகம் பகுதி வட்டாரத்தின் ஆரம்ப கால கழகத் தோழர்.

கழகத்திற்கு, தொடக்க காலத்தில், பகுதிச் செயலாளர்கள் நியமிக்கப்பட்டபோது, துறைமுகம் பகுதிக் கழகத்தின் செயலாளராக தலைமைக் கழகத்தால் நியமிக்கப்பட்ட சிறப்புக்குரியவர் இவர்.

கழக மூத்த தலைவர்களுடனும், முன்னோடிகளுடனும் நெருங்கிப் பழகும் வாய்ப்பைப் பெற்றவர்.

ஸ்டேன்லி அரசு பொது மருத்துவமனை ஆலோசனைக் குழு உறுப்பினராகவும், தமிழ்நாடு குடிசை பகுதி மாற்று வாரிய ஆலோசனைக் குழு உறுப்பிரானவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.